


# “பாசிசத்தை எதிர்க்க தி.மு.க.வுக்குத் துணை நிற்போம்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத்திருவிழா’ நிகழ்ச்சியின் ஒருபகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக்கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் இரண்டாம் அமர்வில் ‘சமகால ஊடகங்களில் சமூகநீதி உரையாடல்’ என்னும் தலைப்பில் ஊடகவியலாளர் பா.ம.மகிழ்நன் அவர்கள் ஆற்றிய உரை :**

‘சமகால ஊடகங்களில் சமூகநீதி உரையாடல்கள்’ என்னும் தலைப்பை எனக்கு கொடுத்திருக்கிறார்கள். சமகாலம் என்றால் எதை அடையாளப்படுத்துவது, நேற்றா, அதற்கு முதல்நாளா, போன மாதமா? ‘சமகாலம்’ என்பது இந்தியாவில் பாசிச சக்திகள் எழுச்சி கொண்டிருக்கிற இந்தக் காலகட்டம், அதை எதிர்கொள்ளும் நாம் வாழும் கால கட்டத்தையே சமகாலம் என்று புரிந்துகொள்கிறேன்.

‘மெயின் ஸ்ட்ரீம் மீடியா’ என்று சொல்லப்படும் தொலைக்காட்சி போன்ற மையநீரோட்ட ஊடகங்களில் நான் பணிபுரிந்திருக்கிறேன். அந்த ஊடகங்களில் ‘நடுநிலை’ என்பது எந்த அரசியலையும் சாராதது என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், திராவிட இயக்க வெறுப்பே நடுநிலை என்று சொல்லப்படுகிறது. நீங்கள் திராவிட இயக்கத்தின்மீது



**பா.ம.மகிழ்நன்**
**ஊடகவியலாளர்**

சில கூற்றுகளைப் பெரியாரின் கூற்றுகள் என்று முன்வைக்க, அந்த சங்கி, பெரியாரை இன்னும் வேகமாகத் திட்டினார். கடைசியில் ‘இப்போது நான் சொன்ன கூற்றுகள் எதுவும் பெரியார் சொன்னதில்லை, அம்பேத்கர் சொன்னது’ என்று சொல்லவும் அந்த சங்கி முகத்தில் ஈயாடவில்லை. எது பெரியார் சொன்னது, எது அம்பேத்கர் சொன்னது என்பதே தெரியாத அறிவிலிகள்தான் சங்கிகள்.

ஆனால் மோடி, அன்னா ஹசாரே போன்றவர்களைப் பற்றி பொய்யான பிம்பங்களைக் கட்டியெழுப்புவதில் அவர்கள் வெற்றியடைந் திருக்கிறார்கள். அதற்கு ஊடகங்களும் ஒத்துழைக்கின்றன. அன்னா ஹசாரேவின் சொந்த ஊருக்கு நான் சென்றிருக்கிறேன். அவரைப் பற்றி ஊடகங்கள் கட்டமைப்பது எல்லாம் பொய்யான பிம்பங்கள் என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

அப்படித்தான் மோடியைப் பற்றியும் பொய்யான பிம்பங்களைக் கட்டமைத்து நம் தலையில் கட்டினார்கள். ‘மோடி குஜராத் மாநிலத்தின் கடன்களை எல்லாம் அடைத்துவிட்டு மிச்சத்தை வங்கியில் போட்டுவிட்டார்’ என்றெல்லாம் விதவிதமான கதைகள் சொன்னார்கள். ஆனால் எல்லாப் பொய்களும் ஒவ்வொன்றாக அம்பலமாகின. உடனே என்ன செய்தார்கள்?

## அனைவரும் போற்றும் அறிவுத்திருவிழா!

**கழக இளைஞர் அணியின் அறிவுத்திருவிழா குறித்து எழுத்தாளர் கரிகாலன் தன் முகநூலில் எழுதிய பதிவில் இருந்து...**

‘கடந்த மூன்று நாட்கள் ஒரு வேலையாக சென்னை வந்திருந்தேன். சனி, ஞாயிறு இரண்டு நாட்களும் மாலையில் முற்போக்கு புத்தகக் காட்சியில் இருந்தேன். அறிவுத் திருவிழா ஞாயிறு நிறைவடைந்தது. தி.மு.க. போன்ற ஒரு கட்சி புத்தகக் காட்சி பற்றி சிந்திப்பதில் வியப்பில்லை. இது போன்ற செயல்பாடுகள் தொண்டர்களைப் படிக்க ஊக்குவிப்பதில் உதவிசெய்யும்.

ஞாயிறு அன்று முதல்வர் ஸ்டாலினும், துணை முதல்வர் உதயநிதியும் புத்தகக் காட்சியில் இடம் பெற்ற ஒவ்வொரு அரங்கிற்கும் சென்றிருக்கிறார்கள். பணம் கொடுத்து ஒவ்வொரு அரங்கிலும் நூல்களை வாங்கி இருக்கிறார்கள்.

அண்ணாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உரைகள் அடங்கிய

‘Carry on, but remember’ நூலை வாங்கி யிருக்கிறார் முதல்வர். நூல் குறித்து சமூக ஊடகங்களில் பதிவும் செய்திருக்கிறார் . அந்த நூல் நேற்று மாலை விற்று தீர்ந்திருக்கிறது.

இப்புத்தகக் காட்சி வெற்றி அடைந்திருப்பதாகவே உணர்கிறேன். குறைந்த கட்டணம், உணவு ஏற்பாடு, காற்றோட்டம், தூய்மை பராமரிப்பு, என இத்திருவிழா ஏற்பாடுகள் சிறப்பாக அமைந்திருந்தன. பதிப்பகத்தார் முகத்தில் நிம்மதி தெரிந்தது.

திமுக இளைஞரணிக்கு உத்வேகத்தை இந்த அறிவுத் திருவிழா வழங்கி உள்ளது. திமுக ஆட்சி தொடர்ந்தால், அடுத்த ஆண்டு இக்காட்சி இன்னும்கூட விரிவடையும். சமூகப் பங்கேற்பும் கூடுதலாக இருக்கும்’.



விமர்சனமே வைக்கவில்லை என்றால் உங்களை நடுநிலைவாதி என்று ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள். எனக்கும்கூட ஒருகாலத்தில் அப்படி ஒரு கருத்து இருந்தது.

ஒருகட்டத்தில் நான் இன்னொரு ஊடகமான திரைத்துறைக்குள் நுழைந்தேன். ‘சார்பட்டா பரம்பரை’ திரைப்படத்தில் பணிபுரிந்தபோது, அந்தத் திரைப்படப் பணிக்காக, 1970-76 காலகட்டத்து ‘முரசொலி’ இதழ்களையும் கலைஞரின் ‘நெஞ்சுக்கு நீதி’யையும் படித்தேன். அப்போதுதான், ‘கலைஞர் ஒரு சூப்பர் ஸ்டார்’ என்று எனக்குப் புரிந்தது. திரைத்துறையில் தன் கேரியரின் உச்சத்தில் இருந்தவர் கலைஞர். ஆனால், அவர் அதைத் தன் சுயநலத்துக்காகப் பயன்படுத்தவில்லை. தன்னுடைய கொள்கைகளை, அரசியலைச் சொல்வதற்காக அவர் பயன்படுத்தினார்.

எமெர்ஜென்சி காலகட்டத்தில் கலைஞர் செய்ததை எல்லாம் படிக்கும்போது, ஒரு கதாநாயகன் சினிமாவில் என்னென்ன சாகசங்கள் செய்வானோ அதையெல்லாம் செய்தவர் கலைஞர் என்று தோன்றியது. நாம் நாயகர்களைத் திரையில் தேடிக்கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் கதாநாயகர்களாகவே வாழ்ந்தவர்கள் அண்ணாவும் கலைஞரும்.

‘சென்னை மாநிலம் என்ற பெயரை மாற்றி தமிழ்நாடு என்ற பெயரைச் சூட்டிவிட்டேன்; சுயமரியாதைத் திருமணத்துக்கு சட்டபூர்வ அங்கீகாரம் அளித்துவிட்டேன்;இருமொழிக்கொள்கை தீர்மானம் நிறைவேற்றிவிட்டேன். இதையெல்லாம் எதிர்காலத்தில் யாராவது மாற்ற நினைத்தால் மக்கள் கொதித்தெழுவார்கள். அந்த அச்சம் இருக்கும்வரை அண்ணாதுரைதான் இந்த நாட்டை ஆள்கிறான் என்று அர்த்தம்’ என்று அண்ணா பேசியது, உண்மையில் சினிமாவில் ஹீரோக்கள் பேசக்கூடிய பஞ்ச் டயலாக். ஆனால், அதை எதார்த்தத்தில் பேசியவர் அண்ணா.

நெருக்கடிநிலை காலகட்டத்தில் ‘முரசொலி’ போன்ற பத்திரிகைகளுக்குத் தணிக்கை இருந்தது. அப்போது தி.மு.க.வினர் யார் யார் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது மற்றவர்களுக்குத் தெரியாது. அப்போது ‘அண்ணாவின் நினைவு நாளில் கலந்துகொள்ள முடியாதவர்கள்’ என்று கைதானவர்கள் பட்டியலை மறைமுகமாக ‘முரசொலி’யில் வெளியிட்டார், கலைஞர். தனி ஒரு ஆளாக மெரினா கடற்கரையில் துண்டுப்பிரசுரங்களைக் கொடுத்தார். ‘இப்படிப்பட்ட சாகசக்காட்சிகளை நாம் திரைப்படத்தில்கூட பார்க்கவில்லையே’ என்று எனக்குத் தோன்றும். அண்ணாவையும் கலைஞரையும் சூப்பர் ஸ்டாராகச் சித்திரிக்கும் திரைப்படங்கள், வெப்சீரிஸ்களை உருவாக்க வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறேன்.

நான் ஊடகங்களில் பணிபுரிந்தபோது தெரிந்துகொண்ட உண்மைகளில் ஒன்று, சங்கிகள் அப்பட்டமான பொய் சொல்வார்கள் என்பது. நானும் தோழர் செந்தில்வேலும் ஒரே தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரிந்தோம். அப்போது ஒரு நிகழ்ச்சியில், சங்கி ஒருவர் பெரியாரைப் பற்றி மிகமோசமாகப் பேசினார். அப்போது செந்தில்வேல், இந்துத்துவம் குறித்த

பல்வேறு ஊடகங்களில் முற்போக்குச் சிந்தனையாளர்கள் பணிபுரிந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாம் ஒவ்வொருவராகக் குறிவைக்கப் பட்டு நிறுவனங்களில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். கடைசியில் என்ன நடந்தது? யாரெல்லாம் ஊடகங்களில் இருந்து நீக்கப்பட்டார்களோ அவர்களே இப்போது தனி ஊடகங்கள் ஆகிவிட்டார்கள். அவர்கள் தொடர்ச்சியாகத் துணிச்சலுடன் பாசிசத்தை எதிர்க் கிறார்கள். சமகாலத்தில் நடந்த சமூக நீதிக்கான மாபெரும் உரையாடலாக இதைப் பார்க்கிறேன்.

‘ஒரு அடிமைக்கு முதலில் அவன் அடிமை என்று உணர்த்து. பிறகு, அவன் தானாக உணர்வுபெற்று போராடுவான்’ என்றார் அண்ணல் அம்பேத்கர். அதைத்தான் திராவிட இயக்கம் செய்தது. அதைத்தான் தந்தை பெரியார் செய்தார். ‘மனுநீதிப்படி நீங்கள் எல்லாம் சூத்திரர்கள், அடிமைகள்’ என்று பெரியார் தெருத்தெருவாக, ஊர் ஊராகப் போய் பேசினார். அந்த அடிமைத்தனத்தை ஒழிக்க உருவானதுதான் திராவிட இயக்கம்.

மகாராஷ்டிராவில் சத்ரபதி சிவாஜி மாபெரும் மன்னர். ஆனால், அவர் சத்திரியர் இல்லை என்று பார்ப்பனர்கள் அவருக்கு மகுடம் சூட்ட மறுத்தார்கள். இதுகுறித்து அம்பேத்கர் எழுதியிருக்கிறார். இதை நாடகமாகவே எழுதியவர் அறிஞர் அண்ணா. ‘சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்’ நாடகம், அரசனாகவே இருந்தாலும் அவன் எப்படி வர்ணாசிரமத்துக்கு, பார்ப்பனர்களுக்கு அடிமையாக இருந்தான் என்பதைச் சொல்லியது.

இப்போது என்ன நடக்கிறது? மோடி என்ற மன்னர் செங்கோலுடன் அமர்ந்துகொண்டு, ‘நான் மன்னன், மக்களை வழிநடத்துகிறேன்’ என்கிறார். இப்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் - S.I.R. கொண்டுவந்திருக்கிறார்கள். S.I.R. என்றால் என்ன அர்த்தம்? ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ என்று சொன்ன பாசிச பா.ஜ.க, ‘ஒரே நாடு உனக்கு எதற்கு தேர்தல்?’ என்று கேட்பதுதான் S.I.R. இதை நடைமுறைப்படுத்தி ‘நீங்கள் இந்திய குடிமக்கள் இல்லை, எங்கள் அடிமை’ என்ற இடத்துக்கு நம்மைக் கொண்டுசெல்ல பா.ஜ.க. முயல்கிறது. இதற்கு எதிராகத்தான் தி.மு.க. போராடுகிறது.

பாசிஸ்ட்கள் வளர்ந்திருக்கும் சூழலில் ‘நீங்கள் யார் சார்பாகவும் பேசக்கூடாது, நடுநிலையாகத்தான் இருக்க வேண்டும்’ என்பது ஒரு ஏமாற்றுவேலை. அவர்கள் நடுநிலையாக இருக்கச்சொல்வதன் அர்த்தம், பாசிசத்தை ஆதரிக்க வேண்டும் என்பதுதான். பாசிசத்தை யாரெல்லாம் எதிர்க்கிறார்களோ, அவர்கள் எல்லாம் தி.மு.க.வை ஆதரிக்கிறார்கள்.

நான் தி.மு.க. உறுப்பினர் கிடையாது. நான் திராவிடர் கழகத்தில் இருந்து வந்தவன். நாங்கள் ஏன் தி.மு.க.வுக்கு ஆதரவாக நிற்கிறோம் என்றால் தி.மு.க.தான் பாசிசத்துக்கு எதிராகத் தொடர்ந்து உறுதியுடன் போராடுகிறது. இன்று நம் வாக்குரிமையைப் பறிக்கும் சதிவேலை நடக்கிறது. அதை முறியடிக்கவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. பாசிசத்துக்கு எதிராக நாம் தொடர்ந்து போராடுவோம்!”